## OCHC யுடன் சேர்ந்து வேலை செய்யும் பொழுது எதனை எதிர் பார்க்கலாம்?

எங்கள் அணி அவர்களது வேலையை வழிநடத்துவதற்கு "**OCHC அணுகல் முறை**" யைப் பயன் படுத்தும். "**OCHC அணுகல் முறை**" யானது ஒவ்வொரு குடியிருப்பாளர்களையும் தனித்துவத்துடன் கையாள்கிறது. ஏனெனில் ஒவ்வொருவரது நிலமையும் பிரத்தியேகமானது.

**OCHC அணுகல் முறை பின்வருமாறு:**

- திட்டவட்டமான செய்திப்பரிமாற்றம் செய்கிறது
- குடியிருப்பாளர்களை ஈடுபடுத்தி வலிமை ஊட்டுகிறது
- ஆக்கபூர்வமான இணக்கமுள்ள திட்டங்களைப் பயன் படுத்துகிறது
- குடியிருப்பாளர்களிற்கு செய்திகள் வழங்கப்படுகின்றன
- தீவிரத்துடனும் அதிக கரிசனையுடனும் தொழிற்படுகின்றது
- அடிப்படையான காரணங்களிற்கு தீர்வு காண்கின்றது
- வெளியார் நிதியுதவியைப் பெற்றுக்கொள்கின்றது
- நிதி பரிபாலனம் பற்றிய அறிவை வளர்க்கின்றது
- குடும்பங்களிற்கு உதவி ஒத்தாசை அளிக்கின்றது
- பணத்தை மீளச்செலுத்துவதற்குரிய நியாயமான ஒப்பந்தங்களை ஏற்படுத்துகின்றது



## உங்களைச் சந்திப்பதற்கு ஆவலாக உள்ளோம்....

உங்களுக்கு OCHE பற்றி ஏதாவது கேள்விகள் இருப்பின் எம்மை தொடர்பு கொள்ளவும் அல்லது எமது இணையத்தளத்தின் ஊடாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.




**அமைவிடம்**
339 Bloor Street, Suite 221
Toronto, Ontario
M5S 1W7
(சக்கர நாற்காலிகள் செல்லக்கூடிய வாசல் 341 Bloor Street West ல் உள்ளது)

தொலைபேசி – 416-632-7999
தொலைநகல் - 416-217-0335

**இணையத்தளம்**
www.oche.ca
info@oche.ca

பதிப்புரிமை @2018 வீடமைப்பு சமஉரிமை ஆணையாளர் காரியாலயம்

COMMISSIONER OF HOUSING EQUITY



# வீடமைப்பு சமஉரிமை ஆணையாளர் காரியாலயம் (OCHE)

சீரிய நிலை பேணுதல் ● பாரபட்சமின்மை ● சுதந்திர

## வீடமைப்பு சமஉரிமை ஆணையாளர் என்பவர் யார்?



தொழில்சார் உத்தியோகத்தர் குழாமிற்கு Cynthia Summers தலைமை தாங்குகிறார். அவர்கள் நீதி சார்ந்த விடயங்கள் சமூக சேவை உளநோய் பிரச்சனை தீர்த்தல் மற்றும் சமூக வீடமைப்பு எனபனவற்றில் அனுபவங்களை உடையவர்கள். குடியிருப்பை விட்டு வெளியேற்றப்படுவதைத் தடுப்பதை இலக்காகக் கொண்டு தொழிற்படுகிறார்கள்.

Cynthia (சிந்தியா) என்பவர் பதிவு பெற்ற சமூகநல நிலதாரி. இவர் வலுவற்றோர் முதியோர் உட்பட உள நோய் ஊனமுற்றோர் குறைந்த வருமானமுடையோர் மற்றும் கனடாவின் புதிய குடிவரவாளர்கள் பற்றிய ஆழ்ந்த அறிவும் தொழிற் திறமையும் உடையவர்.

சட்ட நிர்வகிப்புத்துறையில் இவர் 15 வருடங்களிற்கு மேலாக அனுபவமுடையவர். இவர் மத்திய அரசாங்கத்தினால் குடிவரவு மற்றும் அகதிகள் நிர்வாக சபையிலும் ஒன்ராரியோ மாகாண அரசில் "ஒன்ராரியோ வாடகைக் குடியிருப்பு நியாயஸ்தலத் தில்" அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## யாருக்கு நாங்கள் வேலை செய்கிறோம்?

ரொறொன்ரோ சமூக வீடமைப்பில் வாழும் பின் வரும் குடியிருப்பாளர்களிற்கு:

- முதியோர்கள்(59 +) அல்லது பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய நலிந்தவர்கள்
- வாடகை செலுத்தாது சட்டப்படி வெளி-யேற்றப்பட இருப்பவர்கள்







## எப்படி நாங்கள் வேலை செய்கிறோம்?

கீழ்வருவனவற்றிற்காக குடியிருப்பாளர்களுடனும் பிர-திநிதித்துவ ஸ்தாபனங்க ளுடனும் இணைந்து OCHC வேலை செய்யும்:

- வாடகைப்பணம் கட்டாததற்குரிய அடிப்படைப் பிரச்சனைகளை அடையாளம் கண்டு...
- குடியிருப்பாளர்களுடன் இணைந்து அவற்றிற்கு எப்படி ஆரோக்கியமான நீண்ட கால பரிகாரங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதுடன்
- குடியிருப்பாளர்கள் தொடர்ச்சியான ஆதரவை பெறுமுகமாக பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களுடன் இணைத்து விடுதல்

OCHC மேலும் TCHC சார்ந்த உத்தியோகத்தர்கள் சரியான முறைகளைப் பின்பற்றுகிறார்களா எனவும் TCHC ற்கு பரிந்துரைக்கப்படும் நடவடிக்கைகளைப் பின்பற்றி அதன் மூலம் பெற்ற பெறு பேறுகளை விபர-மான அறிக்கை மூலம் சமர்ப்பிக்கிறார்களா என ஆழ்ந்த விசாரணைகளைக் கூட மேற்கொள்ளும்.

## சில செயற்பாடுகள் எம்மால் செய்யமுடியாதவை

- இடமாற்றம்
- வாடகை கணித்தல்
- பராமரிப்பு
- வேறு வகையான வெளியேற்றல்கள்

எனினும் எவ்வித தயக்கமுமின்றி எம்முடன் தொடர்பு கொள்ளலாம். நாங்கள் உங்களுக்கு உதவி செய்யக்கூடிய ஒருவரை தொடர்பு படுத்தி விடுவோம்.

## முதற் தடவையாக ERO வை சந்திப்பது

கீழ் காணும் படத்திலுள்ள ஆரம்பத்தீர்வு நிலதாரிகள் (ERO) குடியிருப்பாளர்க ளுடன் அர்ப்பணிப்புடன் வேலை செய்து எமது காரியாலயத்திற்கு முன்னிலைப்படு த்துவார்கள்.



நீங்கள் வாடகைப்பணம் கட்டவேண்டியிருந்து வெளியேற்ற உத்தரவு கிடைத்திருந் தால் தயக்கமின்றி எம்மை தொடர்பு கொள்ளவும் அல்லது ஒரு குடும்ப அங்கத்த வரோ வக்கீலோ ஸ்தாபன பிரதிநிதியோ உங்களுக்காக எம்மை தொடர்பு கொள்ள லாம். உங்கள் வேண்டுகோள் எமது தொழிற்பாட்டிற்கு அமைய இருந்தால் ERO ஒருவர் உங்களை அணுகி சந்திப்பதற்கு வசதியான நேரத்தையும் இடத்தையும் ஒழுங்கு செய்வார். அப்படியல்லாதவிடத்து நாங்கள் உங்களை சரியான நபரிடம் அனுப்புவோம்.

உங்களது முதலாவது சந்திப்பில் வாடகைப்பணம் கட்டுவதில் உங்களுக்கு உள்ள சவால்கள் என்ன என்பன பற்றி விவாதித்து எப்படி நாங்கள் உங்களுக்கு உதவ லாம் என்பது பற்றி தீர்மானிக்கப்படும். தொண்டு முறையான இச்செயற்பாட்டில் ERO என்பவர் உங்களுக்குரிய நீண்டகாலத் தீர்மானமொன்றை அடையாளம் கண்டு மேலதிக உதவிகளை அடைவதற்குரிய தொடர்பை ஏற்படுத்தி குடியிருப்பு தகமையை பேணுவதற்கு வழி செய்வார்.

ERO வை சந்திக்க வரும் பொழுது வாடகைப்பணம் கட்டுவதில் உங்களுக்கு உள்ள சவால்கள் பிரச்சனைகள் பற்றிய தகவல் பத்திரங்கள் ஆவணங்கள் போன்றவற்றை கொண்டு வரவும். அவை என்ன என்பது தெரியவில்லையாயின் நாங்கள் அந்த ஆவணங்களை அடையாளம் காண்பதற்கு உதவி செய்வோம்.